<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

**அசல் வழக்கு எண் : 98/2012**

**DW4 – திரு. ராஜபாண்டியன் த/பெ. தனுஷ்**

**12.02.2026**

<u>சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**நேரம் 15.00 மணி**

நான் தற்போது கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். இதற்கு முன்பதாக ஓட்டோ ஓட்டி வந்தேன். நான் ஆட்டோ ஓட்டி வந்தேன் என்பதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் யாரெல்லாம் வாதி என்றால் வேணுவின் மகள் வழக்கு தொடுத்துள்ளார். அவர்கள் பாகல்மேட்டில் தற்போது வசித்து வருகிறார்கள். வேணு என்பவர் 2 ஆம் பிரதிவாதி ஆசீர்வாதத்தின் தந்தையாவார். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்வதற்கு ஆட்டோ வேண்டும் என்று யார் கேட்டார்கள் என்றால் ஆசீர்வாதம் கேட்டார். பாகல்மேட்டிலிருந்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார்கள். நான் ஓட்டி சென்ற ஆட்டோவின் பதிவு எண் ஞாபகமுள்ளதா என்றால் இல்லை. பாகல்மேடு கிராமம் ஆகும். கூட்ரோடு தான் மெயின் பஜார் ஆகும். மேற்படி இருவரும் பாகல்மேட்டிலிருந்து ஆட்டோவில் ஏறினார்கள். சார்பதிவாளர் அலுவலகம் சென்றோம். நான் வெளியே காத்துக் கொண்டிருந்தேன். என் மகள் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளேன் அதில் சாட்சி கையொப்பம் இடவேண்டும் என்று கூறினார். நான் வெளியில் இருந்ததால் வேணு உயிலில் கையொப்பமிட்டதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வேணு குடும்பம் பூர்வீகமாக அங்கு இருப்பது தெரியும் என்றால் சரிதான். வேணு உயில் கைொயப்பம் போட்டோரா அல்லது கைரேகை வைத்தாரா என எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். அப்போது

வேணு எவ்வாறு இருந்தார் என்றால் ஆரோக்கியமாக இருந்தார். அவர் என்னை பார்த்து யாரென்று அடையாளம் தெரிந்து என்னை அழைத்தாரா என்றால் அவர் தான் என்னை உயிலில் சாட்சி கையொப்பமிட அழைத்தார். வேறு யாரையும் அழைக்கவில்லை. உயில் எழுதியபிறகு வேணு எத்தனை நாள் உயிருடன் இருந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. உயில் எழுதி 25 நாட்களுக்குள் அவர் இறந்துவிட்டார் என்றாலும் அவர் பலவீனமாக இருந்தபோது அவரை ஆட்டோவில் வைத்து அழைத்துக்கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் சரியல்ல. அவர் ஆரோக்கியமாக தான் இருந்தார். வேணு தனக்கு கையொப்பம் போடதெரியும் என்றும் தனக்கு கண் தெரியாததால் கைரேவை வைத்துள்ளேன் என்று உயிலில் கூறப்பட்டுள்ளது என்றாலும் நான் அவர் என்னை அடையாளம் கண்டுகொண்டு என்னை சாட்சி கையொப்பமிட அழைத்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேணு உயிலில் கையொப்பம் செய்தாரா அல்லது கைரேகை வைத்தாரா என எனக்கு தெரியாத நிலையில் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**நேரம் 15.10 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.